| UG-A-140 | FTM-01 |
|---|---|

## U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## FUNCTIONAL TAMIL

### முதலாம் ஆண்டு

### கணினித் தமிழ்

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 75**

**பகுதி - அ** **(10X1=10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. கணினி என்றால் என்ன?
2. விசைப்பலகையில் எத்தனை விசைகள் இருக்கும்?
3. கணினியின் பாகங்களை எவ்வாறு அழைப்பர்?
4. கணினியில் பயன்படுத்துப்படும் இயக்க மென்பொருள் ஒன்றினைக் கூறுக.
5. DTP - விளக்கம் தருக.
6. Universal Code - தமிழாக்கம் தருக.
7. 'முனைவர்' B. தெய்வசுந்தரம் வெளியிட்ட மென்பொருளின் பெயர் என்ன?
8. WWW – விளக்கம் தருக.
9. SMS – விளக்கம் தருக.
10. மின்நூல் என எதனை அழைப்பர்?
11. PDF Book எந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியது?
12. தமிழில் உள்ள எழுத்துருக்களின் (Font) வகைகளைக் கூறுக.
13. கணினியின் மூளை என அழைக்கப்படுவது எது?
14. Mouse – தமிழாக்கம் தருக?
15. ஊடக மொழியாளர்கள் இரவரைக் கூறுக.

**பகுதி - ஆ (5X2 =10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. முதன்மை நினைவகம் (Main Memory) என்றால் என்ன?
17. CPU - விளக்கம் தருக.
18. குறியீட்டு முறை என்றால் என்ன?
19. உள்ளீட்டகத்தின் பணி என்ன?
20. தேடு பொறி - குறிப்பு வரைக.
21. தமிழ் விசைப்பலபையின் பணி என்ன?
22. இணையத்தின் புதிய வரவுகள் யாவை?

**பகுதி - இ (5X5 =25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. கணினியின் உள்ளீட்டுக் கருவிகளைக் கூறுக.
24. கணினியை இயக்குவதற்கான மூன்று தொழில் நுட்பங்களைக் கூறுக.
25. குறியீட்டு முறையின் அடிப்படையில் தட்டச்சு செய்யும் மென் பொருட்களை வரிசைப்படுத்துக.
26. தமிழ் 99 - குறிப்பு வரைக.
27. வலைதளம் - குறிப்பு வரைக.
28. இணைய இதழ்கள் குறித்து எழுதுக.
29. இணையவழிக் கருத்தரங்கம் (Webinar) குறித்து எழுதுக.

**பகுதி - ஈ (3X10 =30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவாக விடை தருக.**

30. கணினியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.
31. கணினியில் காணாலாகும் வன்பொருட்களை வரிசைப்படுத்துக.
32. தமிழ் தட்டச்சு குறுஞ்செயலிகள் குறித்து கட்டுரை வரைக.
33. கணினியில் தமிழ் தட்டச்சின் அமைப்புக் குறித்து எழுதுக.
34. இணையவழிக் கற்றலின் போக்கை ஆராய்க.

| UG-A-140 | FTM-01X |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

## FUNCTIONAL TAMIL

### முதலாம் ஆண்டு

### கணினித் தமிழ்

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 70**

**பகுதி - அ** **(3 × 3 = 9 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.**

1. கணினி - வரையறை செய்க.

2. கணினி மொழிகள் என்றால் என்ன?

3. குறும்பரப்பு வளையம் என்றால் என்ன?

4. எழுத்துரு என்றால் என்ன?

5. இணையத் தளங்கள் என்றால் என்ன?

**பகுதி - ஆ** **(3 × 7 = 21 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.**

6. கணினியின் பண்புகள் யாவை? விளக்குக.

7. சொல் திருத்திகள் என்பது யாது? விளக்குக.

8. மின் நூலகங்களின் பயன்கள் யாவை? விளக்குக.

9. தமிழ் எழுத்துருக்களும் விசைப் பலகைகளும் பற்றி எழுதுக.

10. இணையத்தில் மொழியியலின் பயன்பாடு யாது? விளக்குக.

**பகுதி - இ (4 × 10 = 40 மதிப்பெண்கள்)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.**

11. கணினியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

12. தமிழ் யூனிக்கோட் எழுத்துருவின் பயன்பாட்டிலுள்ள சிக்கல்களும் தீர்வுகளும் குறித்து விவரிக்க.

13. தேடுபொறிகள் குறித்து விளக்குக.

14. அஸ்கி அட்டவணை என்பது யாது? சான்றுகளுன் விளக்குக.

15. இணையப் பல்லூடக வெளிப்பாடுகள் குறித்து விளக்கி வரைக.

16. கணினி மொழியியலின் வளர்ச்சி நிலைகள் பற்றி விளக்கி வரைக.

17. கணினியின் பலவகைப்பட்ட பயன்பாடுகள் பற்றி விளக்கி எழுதுக.

| UG-A-142 | FTM-02 |
|---|---|

## U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## FUNCTIONAL TAMIL

### மூன்றாம் ஆண்டு

### மொழிபெயர்ப்புக் கலை

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

பகுதி - அ (10X1=10 மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. 1870 -இல் திரு. விஸ்வநாத பிள்ளை 'Merchant of Venice' என்ற நாடகத்தை --------- என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார்.
2. 2020 -இல் தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்காக சாகித்ய அகாடமி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?
3. வான்மீகி இராமாயணத்தைத் தழுவி தமிழில் கம்பர் இயற்றிய காப்பியத்தின் பெயரினை எழுதுக.
4. எட்வின் அர்னால்டு எழுதிய கவிதையை அடியொற்றி கவிமணி எழுதிய நூல் எது?
5. 'Union is Strength' - தமிழாக்கம் தருக.
6. மூலமொழியில் உள்ளவற்றை _ _ _ _ _ மொழியில் மாற்றித்தருவது மொழிபெயர்ப்பாகும்.
7. 'Bail'- இச்சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்லை எழுதுக.
8. சுப்பிரமணிய பாரதியார் _ _ _ _ _ நாட்டின் தேசீயகீதத்தைத் தமிழாக்கம் செய்தார்.
9. 'Legal Studies'- இச்சொல்லுக்குரிய கலைச்சொல் எது?
10. 'Lock –Up'- தமிழாக்கம் தருக.
11. 'Budget'- என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
12. 'I was helped' - தமிழில் மொழிபெயர்க்க.
13. 'I bulid a house' - தமிழில் மொழிபெயர்க்க
14. "அது ஓடியது" - ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.
15. "நான் அங்கே செல்வேன்" - ஆங்கலத்தில் மொழிபெயர்க்க.

பகுதி - ஆ (5X2 =10 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. மொழிபெயர்ப்பின் இயல்புகள் யாவை?
17. முழுமையான மொழிபெயர்ப்பு-விளக்கம் தருக.
18. மொழியாக்கம் என்றால் என்ன?
19. விடுகதைகளை மொழிபெயர்ப்பது எப்படி?
20. சித்திரக் கவிகளை மொழிபெயர்க்க முடியுமா?
21. கலைச்சொற்களின் இயல்புகள் யாவை?
22. அறிவியல் மொழிபெயர்ப்புக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

பகுதி - இ (5X5 =25 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. மொழிபெயர்ப்பின் வரையறைகளைக் குறிப்பிடுக.

24. மொழிபெயர்ப்பாளரின் தகுதிகள் யாவை?

25. சட்ட மொழிபெயர்ப்பு-சிறுகுறிப்பு எழுதுக.

26. கலைச்சொல்லாக்க நெறிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

27. மொழிபெயர்ப்பின் வகைகள் யாவை?

28. தமிழில் மொழிபெயர்க்க

அ) You spoke well.
ஆ) I wrote a story.
இ) Deepan got the prize.
ஈ) She sang loudly.
உ) Friends came Yesterday.

29. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.

(அ) அழகிய இந்தக் கோயில் 1980-இல் கட்டப்பட்டது.
(ஆ) பேனாக்கள் மலிவான விலையில் விற்கப்பட்டன.
(இ) பெரிய தேர் மக்களால் எளிதில் இழுக்கப்பட்டது.
(ஈ) ரோஜாப்பூ மாலைகள் இளம் பெண்களால் தொடுக்கப்பட்டன.
(உ) இப்படம் பாரதிராஜாவால் இயக்கப்படவில்லை.

பகுதி - ஈ (3X10 =30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. மொழிபெயர்ப்பு கொள்கைகள் யாவை? விளக்குக.

31. கணிப்பொறி மொழிபெயர்ப்பு பற்றிக் கட்டுரை எழுதுக.

32. அறிவியல் மொழிபெயர்ப்பு- விளக்குக.

33. கலைச்சொல்லாக்க முயற்சிகள் யாவை? விளக்குக.

34. தமிழில் மொழிபெயர்க்க.

Three-fourth of Earth's surface is covered by water bodies. 97 per cent of this water is present in oceans as salt water and is unfit for human consumption. Fresh water accounts for only about 2.7 per cent. Nearly 70 per cent of this occurs as ice sheets and glaciers n Antarctica and other inaccessible places. Only one per cent of fresh water is available and fit for human use. So it is very important to conserve this precious resource. And yet we are contaminating the existing water resources with sewage, toxic chemicals and other wastes. Increasing population and rapid urbanisation has led to over-use of water resources leading to water pollution and scarcity.

## U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## FUNCTIONAL TAMIL

### மூன்றாம் ஆண்டு

### ஆட்சித் தமிழ்

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 75**

**பகுதி - அ (10X1=10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. "தனித்தியங்கும் தன்மை தமிழினுக்குண்டு தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு" எனப் பாடியவர் யார்?
2. "சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே" எனக் கூறியவர் யார்?
3. தமிழின வரலாற்றின் பொற்காலம் எது?
4. தமிழும் வடமொழியும் சரிபாதியாகக் கலந்து எழுதும் மொழிநடையின் பெயர் என்ன?
5. தமிழக நீதிமன்றங்களில் தமிழே ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று முதன் முதலில் அறிவித்தவர் யார்?
6. ஆட்சிமொழிக் காவலர் யார்?
7. தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?
8. அலுவலகப் பலகைகளில் தமிழ்- ஆங்கில எழுத்துக்களின் எழுத்தளவு எவ்வாறு அமைய வேண்டும்?
9. அரசு ஆணையின்படி சார்நிலை அலுவலங்களில் எத்தனை விழுக்காடு தமிழ்த்தட்டச்சுகள் இருக்க வேண்டும்?
10. பேராசிரியர் கல்கியின் நூல்களை, தமிழக அரசு நாட்டுடைமையாக்கிய ஆண்டு எது?
11. '**Home Page**' என்பதின் தமிழாக்கத்தை எழுதுக.
12. திராவிடப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் எது?
13. தமிழில் மருத்துவக் கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்கான ஆயத்தப் பணிகளைத் தமிழக அரசு தொடங்கிய ஆண்டு எது?
14. **'Law and Order '**- இச்சொல்லுக்குரிய கலைச்சொல்லாக்கம் எழுதுக.
15. '**Passport**' என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

**பகுதி - ஆ (5X2 =10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. குறிப்பாணை-விளக்கம் எழுதுக.
17. சிங்கப்பூரில் உள்ள ஆட்சிமொழிகள் யாவை?
18. "ஆட்சி" என்னும் சொல்லின் பொருள் எழுதுக.
19. அரசாணைகள் என்றால் என்ன?
20. திரு.வி.க. விருது பற்றிக் குறிப்பிடுக.
21. ஆட்சிமொழிக்குழு- சிறுகுறிப்பு எழுதுக.
22. திருவள்ளுவராண்டினைக் குறிப்பிடுக.

**பகுதி - இ (5X5 =25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. "ஆட்சி மொழி"- விளக்கம் எழுதுக.
24. மூவாண்டு முனைப்புத்திட்டம் பற்றிக் குறிப்பிடுக.
25. ஊர்திகளில் தமிழ் எழுதுதல் குறித்த அரசின் வழிக்காட்டுதல்கள் யாவை?
26. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ஆய்வு பணிகளைக் குறிப்பிடுக
27. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் ஊக்கத்திட்டங்கள் யாவை?
28. மொழிக்காவலர் நிதியுதவித் திட்டம் பற்றிக் குறிப்பிடுக.
29. பாவேந்தர் பாரதிதாசன் விருது குறித்து எழுதுக.

**பகுதி - ஈ (3X10 =30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. தமிழை ஆட்சிமொழியாக்கத் தனிபட்டவர்களின் முயற்சிகள் யாவை? விளக்குக.
31. ஆட்சிமொழித் திட்டங்கள் யாவை? விளக்குக.
32. கலைச்சொல்லாக்கம் குறித்து எழுதுக
33. நீதிமன்றங்களில் தமிழ் குறித்து விவரிக்க.
34. கணினித் தொழில் நுட்ப இடர்பாடுகள் யாவை? விளக்குக.